**இலங்கை பொற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபை - 2024**

---------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை பொற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அதிகாரசபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபையின் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபையின் உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என

முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

  தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டு கொள்கைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொள்கை இல.10 இன் பிரகாரம், ஆடியோ, வீடியோ முறைமையானது 20 சதவீத விகிதத்தில் தேய்விடப்படல் வேண்டும். இருப்பினும், தேய்விற்காக பயன்படுத்தப்பட்ட விகிதம் 10 சதவீதமாக இருந்தது. அதன் பெறுபேறாக, 2022 ஆம் ஆண்டில் தேய்வானது ரூபா 5,485,855 இனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. எனவே, மேற்கூறப்பட்ட உருப்படிக்கான தேய்மான | அவதானிப்புடன் உடன்படுகின்றோம். நிதிக் கூற்றுக்களில் தேய்வுத் தொகையினை சீராக்க உரிய உத்தியோகத்தர்களிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களுக்கான கொள்கைகள் மற்றும் தேவையான நியமங்களின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்பாடானது குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன் திரண்ட நிதி அத் தொகையினால் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | நிதி நிலைமைக் கூற்றின் குறிப்பு இல.13 இன் பிரகாரம், பெற்றோலிய தரவு கொள்வனவின் சொத்துக்களானது அது கடந்த சில ஆண்டுகளாக எவ்வித வருமானத்தினையும் ஈட்டியிராததனால் பணிப்பாளர்கள் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் 10 வருடங்களிற்குள் சேதஇழப்பிற்காக மதிப்பிடப்பட்டுள்ளது என கூறப்பட்டுள்ளது. இருப்பினும், பெற்றோலிய தரவு கொள்வனவு சொத்தின் பெறுமதி ரூபா 926,500,000 இற்காக எவ்வித சேதஇழப்பு பரிசோதனையும் செய்யப்பட்டிருக்கவில்லை. | பெற்றோலிய தரவு கொள்வனவின் சொத்துக்களானது கடந்த ஆண்டுகளில் PDASL இற்கு எவ்வித வருமானத்தினையும் ஈட்டியிராததனால் 10 வருடங்களிற்குள் சேதஇழப்பிற்காக மதிப்பிடப்பட்டுள்ளது. | சேதஇழப்பு பரிசோதனையானது நிதிக் கூற்றின் கொள்கைகள் மற்றும் நியமங்களின் தேவைப்பாடுகள் என்பனவற்றின் பிரகாரம் செய்யப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பணிக்கொடை ஏற்பாட்டினை கணிப்பிடும் போது, அடிப்படைச் சம்பளத்திற்கான வருடாந்த சம்பள ஏற்றமானது கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை, மேலும் பிழையாக வாழ்கைச் செலவுக் கொடுப்பனவுகளானது கணிப்பீட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. எனவே, பணிக்கொடை செலவு மற்றும் பணிக்கொடைக்கான ஏற்பாடு என்பன ரூபா 628,914 இனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் உடன்படுகின்றோம். நிதிக் கூற்றுக்களில் குறைவாக மதிப்பிடப்பட்ட பணிக்கொடையினை சீராக்க உரிய உத்தியோகத்தர்களிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பணிக்கொடை ஏற்பாட்டிற்கான கணிப்பீடானது சரியான தகவலின் அடிப்படையிலும் தேவையான நியமத்துடன் இணங்கியும் இருத்தல் வேண்டும். |
| (ஆ) | செலுத்த வேண்டிய பணிக்கொடைக் கெதிரான உத்தியோகத்தர் கடன் தீர்ப்பனவு ரூபா 227,000 ஆனது பேரேட்டு கணக்குகளில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே, உத்தியோகத்தர் கடன் மற்றும் பணிக்கொடை கணக்குகளானது அத் தொகையினால் அதிகரித்து காட்டப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் உடன்படுகின்றோம். நிதிக் கூற்றுக்களில் குறைவாக மதிப்பிடப்பட்ட பணிக்கொடையினை சீராக்க உரிய உத்தியோகத்தர்களிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பேரேட்டு கணக்குகளானது நடைபெற்ற கொடுக்கல் வாங்கல் அல்லது நிகழ்வுளின் பிரகாரம் சீராக்கப்படல் வேண்டும். |

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | பரிந்துரை |
|---|---|---|
| 2006 ஆம் ஆண்டில் மேனர் எனும் நோர்வே கம்பனியிடமிருந்து பெற்றோலிய தரவினை கொள்வனவு செய்வதற்காக திறைசேறி உப கடன் இல.20060400 இன் கீழ் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி செயலகத்திற்கு திறைசேறியானது கூட்டு மொத்தம் ரூபா 926.5 மில்லியனினை செலுத்தியிருந்தது. 2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் கீழ், பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி செயலகமானது இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபையாக மறுசீரமைக்கப்பட்டது. அதன்படி, 2021 ஒக்டோபர் 8 அளவில், பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபையானது கூட்டினைக்கப்பட்ட போது, திறைசேரி உப கடன் மீதி ரூபா 243.68 மில்லியன் தொகையானது அதிகாரசபையின் பொறுப்பாக மாறியிருந்தது. திறைசேறி செயற்பாடுகள் திணைக்களத்தின் 2022 ஜுலை 01 ஆம் திகதிய TO/REV/SL/2/91 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம், திறைசேறி உப கடனானது இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபையின் வருடாந்த வருமானத்தில் 10 சதவீதத்தினை பயன்படுத்தி தீர்க்கப்படல் வேண்டும் எனக் கூறப்பட்டிருந்தது, மேலும் அக் கடனானது 2026 திசெம்பர் 31 இல் அல்லது அதற்கு முன்னர் முழுமையாக செலுத்தப்படல் வேண்டும். இருப்பினும், அதிகாரசபையானது 2021 தொடக்கம் 2024 திசெம்பர் 31 வரை ரூபா 21.51 மில்லியனை மாத்திரம் செலுத்தியிருந்தது, மேலும் மீதமுள்ள மிகுதி ரூபா 222.17 மில்லியனானது 2025 மற்றும் 2026 இல் செலுத்த பட்டியலிடப்பட்டுள்ளது. | PDASL ஆனது 2026 இல் தேவையான வருமானத்தினை உழைக்க முடிந்தால் கடன் மீளப்பெறப்படும். | இவ் விடயம் தொடர்பான தகவல் (உ+ம். கடன் உடன்படிக்கைகளின் நிபந்தனைகள், உழைத்த வருமானம், எதிர்பார்த்த வருமானம், தரவு தகவல் பயன்பாட்டாளர்கள், எதிர்கால விலைமனுதாரர்கள்) உரிய தீர்மானங்களை எடுக்க பணிப்பாளர்கள் சபைக்கு அனுப்பப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் பதில் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2021 அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களிற்கான நிறுவன ஆளுகைமீதான வழிகாட்டலின் 3.2 | அதிகாரசபையானது ஒவ்வொரு வருடமும் வருடாந்த செயலாற்றல் மீளாய்வுக் கூட்டத்தினை(APRM) நடாத்துவதற்கு கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. | 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை இறுதியாக்கப்பட்டதன் பின்னர், அது வருடாந்த செயலாற்றல் மீளாய்வுக் கூட்டத்தில் (ARPM) | இது வழிகாட்டிகளின் தேவைப்பாடுகளுடன் இணங்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆம் பிரிவு | இருப்பினும், 2023 ஆம் ஆண்டிற்காக அதிகாரசபையானது ARPM இனை நடாத்தவில்லை. | சமர்ப்பிக்கப்படும். | |
| (ஆ) | 2021 அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களிற்கான நிறுவன ஆளுகைமீதான வழிகாட்டலின் 4.2(ஏ) ஆம் பிரிவு | கணக்காய்வுக் குழுவானது (AC) மூன்று மாதங்களிற்கு ஒருமுறை கூட்டப்பட்டு அதன் பின்னர் விரைவாக தேவையான திருத்த நடவடிக்கைகளிற்கு உதவக்கூடிய வகையில் கூட்டக் குறிப்புகளுடன் அதன் பரிந்துரைகளை பணிப்பாளர்கள் சபைக்கு அறிக்கையிடல் வேண்டும். இருப்பினும், 2024 ஆம் ஆண்டிற்காக AC ஆனது நடாத்தப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் உடன்படுகின்றோம். | இது வழிகாட்டிகளின் தேவைப்பாடுகளுடன் இணங்க வேண்டும். |
| (இ) | 2021 அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களிற்கான நிறுவன ஆளுகைமீதான வழிகாட்டலின் 2.3 ஆம் பிரிவு மற்றும் துணை ஏடு III | அதிகாரசபையானது அனைத்து பிரதான செயற்பாடுகளிற்கான கையேடுகளை முறையாக பராமரித்திருக்கவில்லை. | அவதானிப்புடன் உடன்படுகின்றோம். | அது வழிகாட்டிகளின் தேவைப்பாடுகளுடன் இணங்க வேண்டும். |
| (ஈ) | 2021 இல் 21 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் அதிகாரச் சட்டத்தின் 2(அ) மற்றும் 14(1) ஆம் பிரிவு | அதிகாரசபையின் நோக்கமானது இலங்கையில் சகல பெற்றோலிய வளங்களினதும் பெற்றோலிய கைத்தொழிலை மேல் ஓங்கச்செய்தல், அகழ்தல், அபிவிருத்தி, உற்பத்தி மற்றும் முகாமைத்துவம் என்பவற்றிற்காக தேசிய கொள்கையை வடிவமைப்பதில் ஆலோசனை வழங்குவதற்கு கொள்கை ஆலோசனை குழுவை தாபிப்பதாக உள்ளது. எவ்வாறாயினும், கொள்கை ஆலோசனை குழு இன்னும் தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | கொள்கை ஆலோசனை குழுவானது கௌரவ வலுசக்தி அமைச்சரினால் நியமிக்கப்பட வேண்டும் என அனைத்து மரியாதைகளுடனும் நாங்கள் நம்புகின்றோம். | இவ் விடயம் தொடர்பான தகவல் (உ+ம். தாமதத்திற்கான செயலாற்றல் காரணம் போன்ற) உரிய தீர்மானங்களை எடுக்க பணிப்பாளர்கள் சபைக்கு அனுப்பப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 162,853,438 வருமானத்தை விஞ்சிய செலவினமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 114,671,819 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 48,181,619 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது நிர்வாக மற்றும் தாபன செலவுகள் ரூபா 80,664,857 ஆல் அதிகரித்திருந்தமையே இப்பின்னடைவிற்கான பிரதான காரணங்களாக இருந்தது.

## 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, மீளாய்வாண்டின் முக்கிய வருமானம் மற்றும் செலவினங்களின் பகுப்பாய்வு அதிகரிப்பு அல்லது குறைவடைதல் சதவீதத்துடன் பின்வருமாறுள்ளது.

| பிரதான விடயங்கள் | 2024<br>ரூபா 000' | 2023<br>ரூபா 000' | வித்தியாசம்<br>ரூபா 000' | சதவீதம்<br>% |
|---|---|---|---|---|
| கட்டுநிதி | 24,133 | 8,600 | 15,533 | 181 |
| ஏனைய வருமானம் | 1,390 | 6,920 | (5,530) | (80) |
| நாணயமாற்று இலாபம் / (நட்டம்) | (7,312) | (22,436) | (15,124) | 67 |
| நிர்வாக மற்றும் தாபனச் செலவினம் | 177,581 | 96,917 | 80,665 | 83 |
| நிதி மற்றும் ஏனைய செலவினம் | 3,483 | 10,840 | (7,356) | (68) |
| செலவினத்தை விஞ்சிய வருமானம் | (162,853) | (114,672) | (48,182) | 42 |

## 2.3 விகித பகுப்பாய்வு

மூன்று ஆண்டுகளிற்கான விகிதங்கள் பின்வருமாறு

| விகிதங்கள் | 2024<br>% | 2023<br>% | 2022<br>% |
|---|---|---|---|
| தேரிய இலாப/நட்ட விகிதம் | -674.82 | -1333.39 | -15.74 |
| நடைமுறை விகிதம் | 11.59 | 6.93 | 6.55 |
| சொத்துக்கள் மீதான திரும்பல் (ROA) | -15.74 | -9.59 | -1.01 |
| கடன் உரிமை விகிதம் | 0.32 | 0.3 | 0.28 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்ப்பாட்டு முகாமைத்துவம்.

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில் | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 926.5 மில்லியனிலான பெற்றோலிய தரவுக் கொள்வனவானது நோர்வேயிலுள்ள TGS-NOPEC பூகோள கம்பனி ASA மற்றும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் என்பவற்றின் உடன்படிக்கையுடன் 2001 இல் பெறப்பட்ட இலங்கையின் மன்னார் சமுத்திரத்தில் பெற்றோலிய வளங்களை ஆய்வு செய்வதற்கான கணக்கெடுப்புத் தகவலை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. இப் பெறுமதியானது 2006 ஆம் ஆண்டில் மேற்கூறப்பட்ட வெளிநாட்டு கம்பனியிடமிருந்து பெறப்பட்ட தரவினை கொள்வனவு செய்வதற்கு இலங்கை அரசாங்கத்தினால் செலுத்தப்பட்ட தொகையினை குறிப்பிடுகின்றது. இத் தரவானது பெற்றோலிய அபிவருத்தி அதிகாரசபையின் நடைமுறை அல்லாச் சொத்தாக பரமரிக்கப்பட்டது. மேலும், இத் தரவானது ரூபா 345,321 ஆன ஓர் வருடாந்த கட்டணம் செலுத்தி ஓர் தரவுப் பாதுகாப்பு உறுதிசெய்து ஓர் வெளிநாட்டு கம்பனியில் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டில், அதிகார சபையானது இப் பெற்றோலிய தரவினை விற்பனை | அவதானிப்புடன் உடன்படுகின்றோம். 2026 இல் நடாத்த பட்டியலிடப்பட்டுள்ள மன்னார் வடிநில உரிமம் வழங்கும் சந்கைப்படுத்தல் பிரச்சாரத்தின் போது பெற்றோலிய தரவினை விற்பனை செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது. | இவ் விடயம் தொடர்பான தகவல் (உ+ம். உழைத்த வருமானம், எதிர்பார்த்த வருமானம், தரவு தகவல் பயன்பாட்டாளர்கள், எதிர்கால விலைமனுதாரர்கள்) உரிய தீர்மானங்களை எடுக்க பணிப்பாளர்கள் சபைக்கு அனுப்பப்பட வேண்டும். |

செய்வதிலிருந்து வருமானமாக ரூபா 223.43 மில்லியனினை உழைத்துள்ளது. இருப்பினும், 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டிற்காக எவ்வித வருமானத்தினையும் உழைத்திருக்கவில்லை.

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் அனுமதிக்கப்பட்ட ஆளனியானது 33 பதவிகளாக இருந்தது. ஆனாலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட ஆளனியினுள் உள்ளடக்கப்பட்டிருந்த பணிப்பாளர் நிதி, பணிப்பாளர் சட்டம் மற்றும் இணக்கப்பாடு, மனிதவள முகாமையாளர் போன்ற பிரதான பதவிகள் 2021 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாக கானப்பட்டிருந்தன. மேலும், 2025 ஆகஸட் இலுள்ளவாறு உண்மையான ஆளனி மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை முறையே 6 மற்றும் 27 ஆக இருந்தது. அதன் பெறுபேறாக, செயல் நடவடிக்கைத்திட்டத்திலுள்ள பிரதான செயற்பாடுகளை எதிர்பார்த்தபடி அதிகாரசபையினால் அடைய முடியாமல் இருந்தது. | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் அனுமதிக்கப்பட்ட ஆளனியானது 35 ஆகும். கூறப்பட்ட பதவிகள் உள்ளடங்களாக ஒன்பது உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. | ஆகக் குறைந்தது, பிரதான பதவிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான அனுமதி உரிய அதிகாரசபையிடமிருந்து பெறப்பட்டு அதன்படி செயற்படல் வேண்டும். |